*2022 ஜனவரி 7]*

*முற்பகல் 11–00*

## (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

**திரு. S.R. இராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன். 2021–2022 ஆம் ஆண்டின் பொது நிறுவனங்களின் குழுவின் 4 முதல் 8 வரையிலான 5 அறிக்கைகளை பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.*

## (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.*

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் நன்மதிப்பையும், நம்பகத் தன்மையையும் பெற்று, நல்லாட்சி தந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு மக்களின் முதல்வர் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2022 ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நன்றி, வணக்கம்.*

## 4. குழுக்களின் அறிக்கைகளை புத்தக வடிவில் அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கைகளை கணினியில் பார்க்க வேண்டுமென்றால், என்ன கேள்வி-பதில் என்பதை கணினியில் பார்க்கத் தெரியவில்லை.*

[திரு. துரைமுருகன்] *[2022 ஜனவரி 7*

*அறிக்கைகளையெல்லாம் நீங்கள் கணினியில் போடக் கூடாது. அறிக்கைகளையெல்லாம் படிப்பதற்கு கையில் கொடுக்க வேண்டும். ஏனெனில் இங்கே படிக்க முடியாது; தூக்கிக்கொண்டு சென்றும் படிக்க முடியாது. வீட்டில் இருக்கும்போது படிப்போம். அறிக்கைகளையெல்லாம் கணினியில் போட்டால் சரிவராது. அருள்கூர்ந்து அவற்றைப் படிப்பதற்குக் கையில் கொடுக்க வேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நன்றி, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.*

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) சென்னை மாநகரக் காவல் (ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பு செய்தல்) சட்டமுன்வடிவு, 2022

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பு செய்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2022 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பு செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* (ஆம்)

*மறுப்போர் 'இல்லை' என்க.* (இல்லை)

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*